**இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் - 2021**

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து கூட்டுத்தாபனத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை

எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சங்கம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கூட்டுத்தாபனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- கூட்டுத்தாபனத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கூட்டுத்தாபனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் 69 ஆம் பந்தியின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட கூட்டுமொத்தமாக ரூபா 23.01 மில்லியன் ஆன 03 விசேட நோக்கங்களுக்காக தாபிக்கப்பட்ட நிதியத்தின் 03 கணக்குகள் நடைமுறை யல்லா சொத்தாக வெளிப்படுத்துவதற்கு பதிலாக நடைமுறைப் பொறுப்பாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | நிதியத்தின் 03 கணக்குகள் விசேட நோக்கங்களுக்காக கிடைத்துள்ள நிதியேற்பாடுகளை உள்ளடக்கியமையால் பொருத்தமான நடவடிக்கை களுக்காக ஈடுபடுத்தும் வரை நிதி ஒதுக்கப்பட வேண்டியிருந்தது. | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 02 இன் 36(அ) பந்தியின் பிரகாரம் பயன்படுத்தப்பட்ட கிரய பொறிமுறையை உள்ளடக்கி இருப்பு கணிப்பிடுவதற்காக பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் ஔசுசலவின் மிகுதி இருப்புக்கள் தொடர்பாக அந்த வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | ஔசுசலைகளின் இறுதி இருப்பு கணிப்பிடப்பட்ட முறை 2022 இன் கணக்கு கூற்றில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லா சொத்தாக இழிவுப் பெறுமதி மற்றும் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக ரூபா 128.82 மில்லியன் ஆன நிலையான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதும் தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட வழுவை இலங்கை கணக்கீட்டு நியமம் 8 இன் பிரகாரம் மீளத்திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய சொத்துக்கள் மீண்டும் மீள்மதிப்பீடு செய்வதற்காக 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது முயற்சி எடுக்கப்பட்ட போதும் காணப்பட்ட கொவிட் தொற்றுநோய் நிலைமையின் காரணமாக அந்த பணிகளை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தமை மற்றும் 2022 ஆம் ஆண்டின் போது அந்த சொத்துக்கள் மீள்மதிப்பீட்டிற்காக அரசாங்கத்தின் மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலம் தீர்த்து வைக்கப்படாத இருப்புக்களின் முழுமையான பெறுமதிக்கு சமமாக ஒதுக்கீடு செய்யும் கொள்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக ரூபா 28.50 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் இலங்கை கணக்கீட்டு நியமம் 37 இன் 84 ஆம் பந்தியின் பிரகாரம் அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | நிதியேற்பாடு ஒதுக்குதல் தொடர்பாக கணக்கீட்டு கொள்கை நிதிக்கூற்றில் 2.8 மற்றும் 3.9 என்ற குறிப்புக்களில் காண்பிக்கப்பட்டுள்ளதுடன் ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலமாக தீர்த்து வைக்கப்படாது காணப்படுகின்ற சகல இருப்பு பெறுமதிகளுக்காகவும் ஆண்டிற்கு குறைவாக இருந்த போதும் தெளிவாக மீண்டும் அரசாங்கத்தின் மருந்து களஞ்சியத்திற்கு வழங்க முடியாதிருந்தமையை உறுதிப்படுத்துகின்ற இருப்புக்களுக்காக நூற்றுக்கு நூறு சதவீதம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | - மேற்படி - |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஔசுசலைகளில் எஞ்சிய இருப்புக்களின் கிரயம் மற்றும் அந்த இருப்புக்களின் கைமாற்றல்களின் பெறுமதிக்கு இடையிலான வேறுபாடுகளை இனங்கண்டு அது உழைக்கப்படாத இலாபமாக சீராக்க வேண்டியிருந்த போதிலும் மிகுதி இருப்புக்களின் கிரயம் குறித்துரைத்த ரீதியில் இனங்காணாமல் இருப்பு மாற்றல்களின் பெறுமதி 7.8 சதவீதத்திற்கு சமமான ரூபா 58.00 மில்லியன் மாத்திரம் உழைக்கப்படாத இலாபமாக ஒதுக்கப்பட்டிருந்தது. | பிரதான களஞ்சியத்தில் ஔசுசலைகளுக்கு மாற்றப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகள் ஆண்டின் இறுதியில் எஞ்சிய இருப்பில் மாற்றப்பட்ட பெறுமதி சரியாக கணிப்பிடுவதற்காக தீர்மானிக்கப்பட்ட கணனி முறைமை கூட்டுத்தாபனத்திடம் காணப்படாமை, ஔசுசலைகளின் சராசரியான இருப்பில் மாற்றப்பட்ட சதவீதம் அகற்றி பெறப்பட்ட மதிப்பீட்டு முறைமையில் ஆண்டின் இறுதியில் எஞ்சியுள்ள இருப்பின் மாற்றல் பெறுமதி கணிப்பிடப்படுவதுடன் மேற்கூறப்பட்ட கணிப்பீடுகளுக்காக காணப்படுகின்ற கணனி முறைமையின் தேவையை மாற்றுவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஔசுசலைகளில் எஞ்சியுள்ள இருப்புக்களின் கிரயம் மற்றும் அந்த இருப்புக்களின் கைமாற்றல் பெறுமதிகளுக்கு இடையே வேறுபாடுகளை இனங்கண்டு அதனை உழைக்காத இலாபமாக சீராக்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அட்டுறு செலவினம் ரூபா 372,590 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரிசெய்யப்படும். | இந்த தவறு சரிசெய்யப்பட வேண்டும். |
| (இ) | கடந்த ஆண்டின் போதும் மீளாய்வாண்டின் போதும் 02 வழங்குனர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டு மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்கப்பட்ட மருத்துவ வழங்கலுக்காக பொருட் பெறுவனவு பத்திரத்துடன் பட்டியல் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்படாமையின் காரணமாக கணக்காய்வுத் திகதியான 2022 யூன் 15 ஆந் திகதி வரையிலும் கணக்கீடு செய்யப்படாத கொள்வனவுகள் மற்றும் விற்பனைப் பெறுமதி ரூபா 4.84 மில்லியன் ஆக இருந்ததுடன் அதன் காரணமாக அதற்குரிய சேவைக் கட்டண வருமானம் ரூபா 193,764 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இப்பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | கொள்வனவு மற்றும் விற்பனை பெறுமதி மற்றும் சேவைக் கட்டணம் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கோ அல்லது வெளிப்படுத்து வதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2016 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையான காலத்தின் போது மருத்துவ வழங்கல் பிரிவிற்காக வழங்குனர்களுக்கு விநியோகிக்கப்பட்ட பிரதான கட்டளைகளின் தாமதத்தின் காரணமாக உள்நாட்டு சந்தையிலிருந்து கொள்வனவு செய்வதற்கு ஏற்பட்டிருந்த மருத்துவ வழங்கலுக்காக செலவினைச் செய்ய வேண்டியேற்பட்டிருந்த மேலதிக கிரயம் ரூபா 122.15 மில்லியன் தொகையை உரிய வழங்குனரிடமிருந்து அறவிட வேண்டியதாக காணப்பட்டமை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் அந்தக் காலப்பகுதியின் போது அந்த விடயங்கள் தொடர்பாக சத்திரசிகிச்சை பிரிவினால் செலவிடப்பட்ட மேலதிக கிரயம் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிக்கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் 5.3 இன் கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | மேலதிக கிரயத்தை வெளிப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒட்டுமொத்த கடன்பட்டோரில் 95.6 சதவீதம் அதாவது ரூபா 52,850.87 மில்லியன் தொகை மருத்துவ வழங்கல் பிரிவிலிருந்து கிடைக்க வேண்டியதாக காணப்பட்ட போதும் மருந்து உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குபடுத்தும் அமைச்சின் கணக்கின் பிரகாரம் அத்திகதியில் அந்த மீதி ரூபா 25,514.28 மில்லியன் ஆக இருந்ததுடன் அந்த இராஜாங்க அமைச்சினால் அனுப்பப்பட்டிருந்த மீதி உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் அந்த மீதி ரூபா 47,166.18 மில்லியன் ஆகும். வேறுபாடு முறையே ரூபா 27,336.59 மில்லியன் மற்றும் ரூபா 5,684.69 மில்லியன் தொகைகளுக்கான காரணங்கள் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக விரிவான அறிக்கையொன்று மருத்துவ வழங்கல் பிரிவிலிருந்து கோரப்பட்டுள்ளதுடன் அது கிடைத்தவுடன் இணக்கம் செய்யப்படும். | எதிர்காலத்தில் நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதற்கு முன் இவ்வாறான வேறுபாடுகள் தொடர்பாக இணக்கம் செய்து தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட ல் வேண்டும். |
| (ஆ) | மீதி உறுதிப்படுத்தல் சமர்ப்பித்த 06 சந்தைக் கடன்கொடுத்தோர்களிடமிருந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கணக்குகளின் பிரகாரம் மீதி ரூபா 47.40 மில்லியன் மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட மீதி ரூபா 158.25 மில்லியன் ஆனமையால் அதனிடையே ரூபா 110.85 மில்லியன் தேறிய வேறுபாடு காணப்பட்டது. | கருத்து சமர்ப்பிக்கப்படவில்லை. | மீதி இணக்கம் செய்து வேறுபாட்டிற்கான காரணங்களை இனங்கண்டு சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 1996 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது ஒசுசல மூலம் விற்பனைக்காக கொள்வனவு செய்யப்பட்ட மருத்துவ வழங்கல்களில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தரத்தில் குறைந்தமை, காலாவதியான மற்றும் பாதிப்பிற்கு உட்பட்ட மருத்துவ வழங்கல்களின் கிரயம் ரூபா 215.48 மில்லியன் ஆக இருந்த போதிலும் அத்திகதியில் பௌதீக இருப்பு மெய்மையாய்வு அறிக்கையின் படி அக்கிரயம் ரூபா 195.25 மில்லியன் அளவாக இருந்தமையால் வேறுபாடு ரூபா 20.23 மில்லியன் ஆக இருந்தது. வேறுபாட்டிற்கான காரணம் இருப்பு பற்றாக்குறையாக இருந்ததாக இனங்காணப்பட்டிருந்த போதும் நிதிக்கூற்றுக்களில் தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | இந்த வேறுபாடு 2013 ஆம் ஆண்டின் போது இனங்காணப்பட்டுள்ளதுடன் வேறுபாடு ஏற்பட்டதற்கான காரணம் தொடர்பாக மூன்று உத்தியோகத்தர் களுக்கு எதிராக குற்றப் பத்திரிகை விநியோகித்து முறையான ஒழுக்காற்று விசாரணை நடாத்தப்பட்டதுடன் முறையான ஒழுக்காற்று விசாரணை அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு கூட்டுத்தாபனம் ஒழுக்காற்று உத்தியோகத்தரினால் தற்போது ஓய்வுபெற்றுச் சென்றுள்ள உத்தியோகத்தர்கள் இருவர்களிடமிருந்தும் நிறுத்தி வைக்கப்பட்ட பணிக்கொடை | நிதிக்கூற்றுக்களி ல் தேவையான சீராக்கங்கள் முறையான பிரகாரம் மேற்கொள்ளப்பட ல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பணம் மற்றும் ஏனைய படிகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போது சேவையில் இருக்கின்ற ஏனைய குறித்த உத்தியோகத்தர் முறையான விசாரணை அறிக்கையின் பிரகாரம் சகல குற்றங்களிலிருந்தும் விடுவிக்கப்பட்டுள்ளார். | |
| (ஈ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணனி, உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் போன்ற நிலையான சொத்துக்களின் புத்தக இருப்பு ரூபா 269.71 மில்லியன் ஆக இருந்த போதும், நிலையான சொத்து பதிவேட்டின் பிரகாரம் அத்திகதியில் அந்த பெறுமதி ரூபா 263.54 மில்லியன் மாத்திரமாக இருந்தமையால் வேறுபாடு ரூபா 6.17 மில்லியன் ஆகும். வேறுபாட்டிற்கு குறித்துரைத்த காரணம் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | நிலையான சொத்துப் பதிவேட்டை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | வேறுபாடுகளுக்குரிய காரணம் மற்றும் சரிசெய்தல் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (உ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் மொத்த விற்பனை வருமானம் ரூபா 79,490.40 மில்லியன் ஆக இருந்த போதிலும் விற்பனை பிரிவினால் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட செயலாற்றல் அறிக்கைகளின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 78,284.92 மில்லியன் ஆனமையால் வேறுபாடு ரூபா 205.48 மில்லியன் ஆகும். வேறுபாட்டிற்கான காரணம் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | - மேற்படி - |

1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

1.6.1 பெறவேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2007, 2008, 2009 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்குரிய தீர்த்து வைக்கப்படாத வழியில் நின்ற இருப்புக்களின் (Disputed Goods in Transit) கிரயம் ரூபா 2.00 மில்லியன் மற்றும் சுங்கக் கட்டணம் ரூபா 12.60 மில்லியன் தொகைகளை உரிய தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பழைய தீர்த்து வைக்கப்படாத பெறுமதிகளை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அறவிட வேண்டிய பணம் உரிய தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கோ அல்லது முறையான பிரகாரம் பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொள்கலன் வைப்பு ரூபா 18.62 மில்லியன் ஆக இருந்ததுடன் அதில் ரூபா 6.97 மில்லியன் தொகை 02 வருடங்களுக்கும் 14 வருடங்களுக்கும் இடையிலான காலம் முதல் மீள அறவிடுவதற்கு தவறியிருந்தது. இதனிடையே 2007 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான கால எல்லைக்குரிய ரூபா 5.74 மில்லியன் தொகையான வைப்புக்களில் 2021 ஆம் ஆண்டின் போது எந்தவொரு தொகையும் மீள அறவிடுவதற்கு தவறியிருந்தது. | 02 வருடங்களுக்கும் 14 வருடங்களுக்கும் இடையிலான காலத்திற்குரிய மீதி ரூபா 5.76 மில்லியனை பதிவழிப்பதற்கு பணிப்பாளர் சபைக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் மிகுதி பெறுமதி வழங்குனரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | - மேற்படி - |
| (இ) | கூட்டுத்தாபனத்தின் கொள்கையின் பிரகாரம் விற்பனை செய்யப்படுகின்ற திகதி முதல் 30 நாட்களுக்கும் 45 நாட்களுக்கும் இடையிலான காலத்தில் விற்பனைப் பெறுமதி உரிய வியாபார கடன்பட்டோரிடமிருந்து அறவிட வேண்டியிருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,311.82 மில்லியன் தொகையான வியாபாரக் கடன்பட்டோர் மீதியில் தனியார், அரசாங்க மற்றும் பகுதி அரசாங்க நிறுவனங்களிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 22.38 மில்லியன் தொகை 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்தும், ரூபா 26.87 மில்லியன் தொகை 01 வருடத்திற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான காலத்திலிருந்தும் அறவிடுவதற்கு தவறியிருந்தது. 05 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய ரூபா 10.44 மில்லியன் கடன் மீதியை அறவிடுவதற்காக மாத்திரம் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 2.37 மில்லியன் தொடர்பாக மாத்திரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | 05 வருடங்களுக்கு மேற்பட்ட கடன்பட்டோர் பெறுமதியான ரூபா 22.38 மில்லியன் மீதி அவ்வாறே காணப்படுகின்றமை, 01 வருடத்திற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான ரூபா 74.69 மில்லியன் தொகையில் தற்போது வரையில் ரூபா 47.81 மில்லியன் அறவிடப்பட்டுள்ளதுடன் மிகுதிப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | கூட்டுத்தாபனத்தின் கொள்கையின் பிரகாரம் கடனை அறவிடுவதற்கான காலஎல்லையில் மற்றும் உடன்படிக்கையின் பிரகாரம் கடனை அறவிடுவதற்கு செயற்திறனாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மருத்துவ வழங்கல் பிரிவிற்கு கிடைக்க வேண்டிய ரூபா 52,850.87 மில்லியன் தொகையில் ரூபா 211.59 மில்லியன் 12 வருடங்களுக்கும் 23 வருடங்களுக்கும் இடையிலும், ரூபா 3,585.36 மில்லியன் 06 | அரசாங்கத்தின் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு பொருட்கள் கையளிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அவற்றை கையேற்று பதிவேடுகளுக்கு கொண்டு வருவதற்கு சரியான முறைமையொன்று | பழைய கடன் மீதியை தீர்த்து வைப்பதற்கோ அல்லது முறையானதாக பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | வருடங்களுக்கும் 14 வருடங்களுக்கும் இடையிலான காலத்திலிருந்தும் அறவிடுவதற்கு தவறியிருந்தது. | காணப்படாமையால் இந்த நிலைமை ஏற்படுவதற்கு பிரதான காரணமாக இருந்ததுடன் இந்த பழைய கடன் மீதியை பதிவழிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் பழைய மீதியை அறவிடுவதற்காக மீதி இணக்கம் மேற்கொள்ளப்படுகின்றது. | வேண்டும். |
| (உ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பாராளுமன்ற கட்டிட தொகுதியிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 14.62 மில்லியன் தொகையில் ரூபா 9.04 மில்லியன் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து அறவிடுவதற்கு தவறியிருந்தது. | பாராளுமன்ற கட்டிடத் தொகுதிக்கு வழங்கப்பட்ட மருந்துகளுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 14.62 மில்லியனை அறவிடுவதற்காக சபாநாயகர், சுகாதார அமைச்சின் செயலாளர் மற்றும் உரிய தரப்பினருடன் கலந்துரையாடப்பட்ட போதும் திருப்திகரமான பதில் கிடைக்காதிருந்தமை மற்றும் 2017 ஆம் ஆண்டின் போது இந்த மொத்த பெறுமதிக்கு சமமான அறவிடமுடியா மற்றும் ஐயக்கடன் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (ஊ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நானாவித கடன்பட:டோர் ரூபா 7.66 மில்லியன் தொகையில் ரூபா 5.68 மில்லியன் தொகை 24 வருடங்களுக்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான காலத்திலிருந்து அறவிடுவதற்கு தவறியிருந்தது. | ரூபா 1.33 மில்லியன் அறவிடுவதற்காக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் மிகுதி பெறுமதிகள் தொடர்பாக பொருத்தமான பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| (எ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழங்குனர்களிடமிருந்து பெற வேண்டிய முற்பணம் ரூபா 928.52 மில்லியன் தொகையில் ரூபா 3.49 மில்லியன் தொகை 06 வருடங்களுக்கும் 14 வருடங்களுக்கும் இடையிலான காலம் முதல் அறவிடுவதற்கு தவறியிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | வழங்குனர்களுக்கு விநியோகிக்கப்பட்ட போதும் தீர்த்து வைக்கப்படாத முற்பணம் குறித்த காலஎல்லையில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

1.6.2 செலுத்தவேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அட்டுறு செலவினம் ரூபா 258.66 மில்லியன் ஆக இருந்ததுடன் அதில் ரூபா 132.07 மில்லியன் 2022 மே 31 ஆந் திகதி வரையிலும் தீர்த்து | காணப்படுகின்ற தகவல்கள் போதியளவாக இல்லாமை மற்றும் ஒப்பந்தகாரர்களினால் நிறுத்தி வைத்தல் பணம் கோரப்படாதிருந்தமை போன்ற | கூட்டுத்தாபனத்தின் கொள்கை மற்றும் உடன்படிக்கை நிபந்தனையின் பிரகாரம் செலுத்த |

| | | | |
|---|---|---|---|
| | வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அதில் ரூபா 9.94 மில்லியன் தொகை 02 வருடங்கள் முதல் 04 வருடங்கள் வரையான பழைய தீர்த்து வைக்கப்படாதிருந்த மீதியாகும். | காரணங்களினால் அட்டுறு செலவினம் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | வேண்டிய பணம் குறித்துரைத்த காலத்தில் தீர்த்து வைக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வியாபார கடன்கொடுத்தோருக்கு செலுத்த வேண்டிய ரூபா 1,217.07 மில்லியன் தொகையில் ரூபா 115.00 மில்லியன் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பணம் கிடைத்தவுடன் கொடுப்பனவு செய்யும் அடிப்படையில் ஏற்பட்ட 01 வருடத்திற்கு மேற்பட்ட பழைய வியாபார கடன்கொடுத்தோருக்கு செலுத்த வேண்டிய ரூபா 115.00 மில்லியன் தொகையில் ரூபா 59.73 மில்லியன் இதுவரையில் செலுத்தப்படாதிருந்ததுடன் உரிய தரப்பினரிடமிருந்து பணம் கிடைத்ததும் தீர்க்கப்படும். | - மேற்படி - |
| (இ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய வங்கிப் பட்டியல் கணக்கின் மீதி ரூபா 14,489.59 மில்லியன் தொகையில் ரூபா 708.42 மில்லியன் 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் வழங்குனருக்கு செலுத்தப்படாத நூற்றுக்கு நூறு சதவீத நாணயக் கடிதப் பெறுமதி மற்றும் நிறுத்தி வைத்தல் பணத்தினை உள்ளடக்கியிருந்த போதிலும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குவதுடன் செலுத்தாதிருப்பதற்கான காரணங்களை தாமதமின்றி சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நீண்டகாலத்தில் வழங்குனர்களுக்கு செலுத்தப்படாத பெறுமதி தொடர்பாக கண்டறிந்து தீர்த்து வைப்பதற்கோ அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் கிடைக்கப்பெற்ற விசேட கட்டளை முற்பணம் ரூபா 21.13 மில்லியன் தொகையில் ரூபா 982,510 குடும்ப சுகாதார பணியகத்திலிருந்து கிடைக்கப் பெற்று தீர்த்து வைக்கப்படாத 10 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய மீதியாக இருந்ததுடன் மிகுதி யுனிசெப் நிறுவனத்திலிருந்து கிடைத்த ரூபா 20.15 மில்லியன் 02 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய மீதியினை உள்ளடக்கியிருந்த போதிலும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குவதுடன் எதிர்வரும் ஆண்டின் போது வருமானத்தை செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வழங்கல்கள் பூர்த்தி செய்யப்பட்டவுடன் அல்லது வழங்கல்கள் கைவிடப்பட்டவுடன் முற்பணங்களை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (உ) | முகவர்களின் தரகு உரிய முகவருக்கு மாத்திரம் செலுத்த வேண்டியிருந்த போதிலும் | மேலதிகமாக செலுத்தப்பட்ட பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | வழங்குனர்களுக்கு செலுத்துவதற்கு முன்னர் முகவர்களின் |

| | |
|---|---|
| மீளாய்வாண்டின் போது முகவர் தரகாக ரூபா 550,912 உரிய முகவருக்கு செலுத்தப்பட்டிருக்கும் போது உரிய வழங்குனருக்கும் செலுத்தப்பட்டிருந்தது. | தரவினை தீர்த்து வைப்பதை உறுதிப்படுத்த வேண்டியிருந்து துடன் மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ள பணத்தை வழங்குனர் களிடமிருந்தோ அல்லது பொறுப்புவாய்ந்த தரப்பினர் களிடமிருந்தோ அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி சட்டம் | | | |
| (i) 10(5) ஆம் பிரிவு மற்றும் 2021 திசெம்பர் 16 ஆந் திகதிய PED/A/REV/1/15 (ii) ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள கடிதம் | ஒவ்வொரு வருடத்தின் போதும் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஒதுக்கீடுகளின் பின்னர் சேமிக்கப்படுகின்ற தேறிய மிகை வருமானம் திரண்ட நிதியத்தில் செலவு வைக்க வேண்டியிருந்ததுடன் பொது முயற்சிகள் திணைக்கள கடிதத்தின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தால் மீளாய்வாண்டின் போது ரூபா 350 மில்லியன் திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட வேண்டும். எனினும் 2022 யூலை 20 ஆந் திகதி வரையிலும் மீளாய்வாண்டிற்காக ரூபா 128 மில்லியன் மாத்திரம் திரண்ட நிதியத்தில் செலவு வைக்கும் வகையில் பொதுத்திறைசேரிக்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் அனுப்புவதற்குள்ள மிகுதி நிதி தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | அரசாங்கத்தின் மருந்து களஞ்சியத்திற்கு மருந்துகளை வழங்குவதால் கிடைத்த இலாபத்திலிருந்து செலுத்த வேண்டிய மிகுதி ரூபா 222 மில்லியன் திறைசேரியால் வழங்க வேண்டிய பணம் வழங்கப்பட்டதன் பின்னர் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிச் சட்டம் மற்றும் உரிய பொது முயற்சிகள் திணைக்களத்தின் கடிதத்தின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த துடன் மேலும் செலுத்த வேண்டிய பணத்தை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) 14(3) ஆம் பிரிவு | ஏதாவதொரு வருடமொன்றிற்காக தயாரிக்கப்படுகின்ற ஆண்டறிக்கை | 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் | நிதிச் சட்டம் மற்றும் உரிய |

| | | | |
|---|---|---|---|
| | உரிய ஏனைய ஆவணங்களுடன் அடுத்துவரும் ஆண்டு ஆரம்பித்து 10 மாதங்கள் கடப்பதற்கு முன்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் 2018, 2019 மற்றும் 2020 என்ற 03 வருடங்களுக்கான ஆண்டறிக்கை தயாரித்து பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை | ஆண்டறிக்கை 2022 யூன் 15 ஆந் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக சுகாதார அமைச்சிற்கு சமர்ப்பிக்கப் பட்டிருந்தமை, 2020 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை அச்சிடுதலில் இறுதிக் கட்டத்தில் காணப்படுவதுடன் மிகவும் குறுகிய காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க முடியும். | சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை<br>-------------------------------- | | | |
| (i) நிதிப்பிரமாணம் 103, 104, 105 மற்றும் 107 | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிரயம் ரூபா 191.86 மில்லியன் ஆன கடந்த ஆண்டின் போதும் மற்றும் மீளாய்வாண்டின் போதும் காலாவதியான இருப்புக்கள் மற்றும் அத்திகதியில் கிரயம் ரூபா 40.71 மில்லியன் ஆன கடந்த ஆண்டின் போதும் மீளாய்வாண்டின் போதும் தரம் குறைவடைந்த இருப்புக்கள் தொடர்பாகவும் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) நிதிப்பிரமாணம் 395(இ) மற்றும் (ஊ) | ஒவ்வொரு மாத இறுதியின் போதும் உள்ள ஏற்பட்ட கொடுக்கல் வாங்கல் தொடர்பாக அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் வங்கி இணக்கக் கூற்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் இலங்கை வங்கி நடைமுறைக் கணக்கிற்குரிய வங்கி இணக்கக் கூற்றுக்கள் 02 மாத தாமதத்தின் பின்னர் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் சம்பத் வங்கி நடைமுறைக் கணக்கிற்குரிய 2021 திசெம்பர் மாதத்தில் முடிவடைந்த 09 மாதங்களுக்கான வங்கி இணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. அவ்வாறே வங்கி இணக்கக் கூற்றுக்கள் | காணப்படுகின்ற கணனி முறைமையில் வரையறையான வசதிகளின் கீழ் காசேடு மற்றும் வங்கி இணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதுடன் இதுவரையில் காணப்பட்ட கணனி முறைமையில் தேவையான வசதிகளுடன் நாளதுவரையாக்கு வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சம்பத் வங்கியின் கணக்கு விற்பனை மேம்படுத்தல் பணிக்காக ஆரம்பிக்கப்பட்ட | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தயாரித்தலின் தாமதம் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும் அறிவிக்கப்பட்டிருக்க வில்லை. | கணக்காக இருந்தமையால் கொடுக்கல் வாங்கல்கள் இடம் பெற்ற மாதங்களுக்கு உரியதாக மாத்திரம் வங்கி இணக்கக் கூற்று தயாரிக்கப்பட்டமை மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படாத போதும் எதிர்காலத்தில் வங்கி இணக்கக் கூற்று மாதாந்தம் தயாரிக்கப்படும். | |
| | (iii) நிதிப்பிரமாணம் 756 மற்றும் 757(2) | நிலையான சொத்துக்கள் வருடாந்தம் மெய்மையாய்வு செய்து அந்த மெய்மையாய்வு அறிக்கைகளின் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்கான மெய்மையாய்வு அறிக்கை 2022 யூன் 05 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | வருடாந்தம் நிலையான சொத்துக்களின் மெய்மையாய்வு பூர்த்தி செய்யப்பட்டு மெய்மையாய்வு அறிக்கை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அவ்வாறு பூர்த்தி செய்யப்பட்டவுடன் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படும். | - மேற்படி - |
| (இ) | 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | திறைசேரி அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளாமல் மீளாய்வாண்டில் எஞ்சிய வருடாந்த விடுமுறைகளுக்காக சேமிக்கப்பட்ட வருடாந்த விடுமுறைகளுக்காக ரூபா 70.63 மில்லியன் தொகையும், ஒரு ஊழியருக்கு மாதாந்த சம்பளம் வீதம் செயலாற்றல் ஊக்குவிப்பு படியாக ரூபா 70.92 மில்லியன் தொகையும் பதவியணியினருக்கு செலுத்தப்பட்டிருந்தது. | கூட்டுத்தாபனத்தின் கூட்டு உடன்படிக்கையின் 6(ii)d பிரிவில் தற்போது வழங்கப்பட்டுள்ள அங்கீகாரத்தின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் ஊக்குவிப்பு படி செலுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2018 திசெம்பர் 07 ஆந் திகதிய PED/03/2018 ஆம் இலக்கம் மற்றும் 2021 திசெம்பர் 15 ஆந் திகதிய PED/03/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் | கூட்டு ஒப்பந்தத்துடன் கூட்டுத்தாபனத்திற்கு இந்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் உரித்தாக்கி கொள்ள முடியாதிருந்த போதும், இந்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து மீளாய்வாண்டிற்காக ஒரு ஊழியருக்கு ரூபா 13,500 வீதம் | - மேற்படி - | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| | சுற்றறிக்கைகள் | ரூபா 12.47 மில்லியன் மிகை ஊதியப் படி செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (உ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கையின் நிறுவன கட்டுப்பாடு தொடர்பான வழிகாட்டியின் 4.3 ஆம் பந்தி | நிறுவனத்தின் வியாபார செயற்பாடுகள், நிதி மற்றும் நிதியல்லா ஆபத்துக்களின் தாக்கங்களை கணிப்பிடல் மற்றும் நிறுவனத்தின் செயற்பாட்டு தன்மைக்கு தாக்கம் ஏற்படுத்துகின்ற ஆபத்தைக் குறைப்பதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்காக கூட்டுத்தாபனத்தால் இடர் முகாமைத்துவக் குழுவொன்று நியமிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2022 மே 31 ஆந் திகதி வரையிலும் அந்தக் குழு நியமிக்கப்பட்டிருக்க வில்லை. | இடர் முகாமைத்துவ குழுவொன்று நியமிப்பதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு பணிப்பாளர் சபை பத்திரமொன்று தயாரிக்கப் பட்டுள்ளதுடன் அடுத்த பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது அங்கீகாரத்தைப் பெற்று பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| (ஊ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிரயம் ரூபா 122.52 மில்லியன் தொகையான கணனி துணைப்பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் என்பவற்றிற்காக சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்கும் வகையில் நிலையான சொத்துப் பதிவேடு பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | கணின துணைப்பாகங்கள் மற்றும் மென்பொருள் களுக்கான நிலையான சொத்துப் பதிவேடு கணனிப் பிரிவினால் பேணிச் செல்லப்படுகின்றது. | - மேற்படி - |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 2,384,563,878 இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 1,969,223,517 ஆகும். அதன் பிரகாரம் நிதிவிளைவுகளில் ரூபா 415,340,361 அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு விற்பனை வருமானம் 27 சதவீதத்தினால் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான செலவின விடயங்களின் முக்கிய பகுப்பாய்வு

முன்னைய ஆண்டினதும் மீளாய்வாண்டினதும் தொழில் தகைமை சேவை செலவினம் முறையே ரூபா 976,783 மற்றும் ரூபா 10,660,320 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் அந்த செலவினம் 991 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. அதற்காக பிரதானமாக வெளித்தரப்பினருக்கு தொழில்ரீதியான சேவை வசதிகள் அதிகமாக பெற்றுக்கொண்டமை காரணமாக இருந்தது.

2.3 விகிதாசாரப் பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் இலாப விகிதம் மற்றும் தேறிய இலாப விகிதம் முறையே 0.5 வீதத்தினாலும் மற்றும் 0.1 சதவீதத்தினாலும், கடன்பட்டோர் புரள்வு விகிதம் 0.2 தடவைகளினாலும் குறைவடைந்திருந்ததுடன் கடனை அறவிடும் காலம் 17 நாட்களினால் அதிகரித்திருந்தது. அது தொடர்பாக கவனம் செலுத்தி கூட்டுத்தாபனத்தின் செயல்நடவடிக்கைகளை வினைத்திறனாக்குதல் வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுத்தாபனத்தின் விற்பனை செயற்பாடுகளுக்காக நியமமிடப்பட்ட செயல் நடைமுறை (Standard Operating Procedure) தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கூட்டுத்தாபனத்தின் விற்பனை செயற்பாடுகளுக்காக நியமமிடப்பட்ட செயற்பாட்டு நடைமுறையொன்றை தயாரிப்பதற்காக 04 உத்தியோகத்தர்களை உடைய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. | நியமமிடப்பட்ட செயற்பாட்டு நடைமுறைகளை தயாரித்து அங்கீகரித்துக் கொள்ளல் வேண்டும். |
| (ஆ) | மருத்துவ வழங்கல் முகாமைத்துவத்திற்காக 2015 ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்ட மருத்துவ வழங்கல் முகாமைத்துவ தகவல் முறைமை (MSMIS) சரியான பிரகாரம் பயன்படுத்தப்படாதிருந்தமை, மருந்து கட்டளையிடல் முதல் இருப்பு கிடைக்கின்ற சந்தர்ப்பம் வரை ஒவ்வொரு படிமுறைகளும் முறைமையில் உள்ளடக்கி (Status) உரிய கட்டளை தொடர்பாக செயல்முன்னேற்றம் நாளதுவரையாக்கும் வசதிகள் அந்த கணனி முறைமையின் மூலம் வழங்கப்பட்டிருந்த போதும் கூட்டுத்தாபனத்தின் உத்தியோகத்தர்கள் கட்டளைக்குரிய தகவல்கள் 07 வருட காலமாக காணப்பட்ட தொழில்நட்ப பிரச்சினையின் காரணமாக முறைமையில் உள்ளடக்காதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. அவ்வாறே கூட்டுத்தாபனத்தால் கட்டளையிடுவதற்குரிய தகவல்கள் ஏனைய கணனி முறைகளில் (Excel) ஊடாக களஞ்சியப்படுத்தப்பட்டமையினால் கேள்வியொன்றின் தொழில்நுட்ப மதிப்பீடு மேற்கொள்ளப்பட்ட திகதி, பெறுகைக் குழு தீர்மானம் வழங்கிய திகதி, நாணயக் கடிதம் திறக்கப்பட்ட திகதி போன்ற தகவல்களை இலகுவாக பெற்றுக்கொள்ள முடியாமையின் | Pronto கணனி முறைமையின் ஊடாக கட்டளை சமர்ப்பிக்கப்பட்ட போதும் அந்த கட்டளைகளின் சட்டரீதியான செல்லுபடித் தன்மையை உறுதிப்படுத்துவதற்கு மருத்துவ வழங்கல் பிரிவு உத்தியோகத்தர்களின் கையொப்பம் காணப்படாமை, MSD இனால் முறைமை இடப்பட்ட கட்டளைகளுக்கு கூட்டுத்தாபனத்தால் முறைமைக்கு பெறுவனவு கட்டளைகளை உள்ளடக்கும் வரையான காலத்தில் MSD இற்கு தேவையான எந்தவொரு முன்னுரிமை கட்டளைகளை மாற்றுவதற்கோ அல்லது முறைமையிலிருந்து அகற்றுவதற்கோ முடியுமாக இருந்தமை மேலும் வசதிகளின் நிபந்தனை (Condition of Supply) இன்றிய கேள்விகளை கோர முடியாதிருந்தமை, சகல கட்டளைகளுக்கும் Condition of Supply பொதுவாக | சுகாதார அமைச்சினதும் மருத்துவ வழங்கல் பிரிவினதும் ஆலோசனை மற்றும் தொடர்பாடல்களின் மூலம் கூட்டுத்தாபனத்திற்கு Pronto கணனி முறைமையை நாளதுவரையாக்க வேண்டியிருந்தது. அதற்காக உள்ள தடைகளை நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காரணமாக பெறுகையின் தாமதத்திற்கு பொறுப்பு வாய்ந்தவர்கள் யார் என பரீட்சிப்பதற்கும், தீர்மானிப்பதற்கும், கட்டளையின் தற்போதைய செயல்முன்னேற்றம் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்வதற்கும் அதிக காலம் எடுத்திருந்தமை அவதானிக்கப்பட்டது. மருத்துவ வழங்கல் பிரிவினால் அந்தந்த ஆண்டுகளிற்குரிய கட்டளை பட்டியல்கள் 11 மாதங்கள் வழங்கல் காலத்துடன் (Lead Time) கூட்டுத்தாபனத்திற்கு இந்த கணனி முறைமையூடாக சமர்ப்பிக்கப்படுகின்ற போதும் கூட்டுத்தாபனத்தால் உடனடியாக அந்த கட்டளைகளுக்குரிய பெறுகை நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியாதிருந்தமையும், கட்டளை பட்டியலின் எழுத்துமூல பிரதி கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்கும் வரை பெறுகை நடவடிக்கைகளை ஆரம்பித்தல் தாமதிக்கப்பட்டமையும், கணனி முறைமை ஊடாக கூட்டுத்தாபனத்திற்கு விநியோகிக்கப்பட்ட கட்டளைகளின் எழுத்துமூல பிரதிகள் கூட்டுத்தாபனத்தின் இறக்குமதி பிரிவிற்கு அனுப்புவதற்கு 18 நாட்களுக்கு மேற்பட்ட காலம் எடுத்திருந்ததுடன் அதன் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டமையால் 11 மாதங்களான வழங்கல் காலஎல்லையில் கவனத்தில் கொள்ளக்கூடிய காலம் கட்டளை விநியோகித்தல் மற்றும் கட்டளை பெற்றுக்கொள்ளும் செயற்பாடுகளுக்காக எடுத்திருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | உறுதிப்படுத்துதல் MSD இனால் மேற்கொள்ளப்படுகின்றமை மற்றும் கூட்டுத்தாபனம் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் கிடைக்கின்ற வன்பொருள் பிரதிகளை அடிப்படையாகக் கொண்டு பெறுகைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | கூட்டுத்தாபனம் தமது செயற்பாடுகள் மற்றும் நிர்வாகப் பணிகளுக்காக 14 முகாமைத்துவ தகவல் முறைமைகளை (MIS) பயன்படுத்துவதுடன் அதில் 12 முறைமைகளில் நிறைவேற்றுகின்ற பணிகள் ஒவ்வொரு முறைமயின் மூலம் நிறைவேற்றுவதற்காக புதிய தொழில்முயற்சி வளங்கள் திட்டமிடும் முறைமையொன்றை அமுல்படுத்துவதற்கு எதிர்பார்த்து ஒப்பந்த உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டிருந்த போதும் பொருத்தமான ஒப்பந்ததாரரை தெரிவு செய்வதற்கு முடியாதிருந்தமையின் அடிப்படையில் ஏற்பட்ட நலிவான செயல்முன்னேற்றத்தின் காரணமாக 2020 பெப்ரவரி 20 ஆந் திகதி ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது கிரயம் ரூபா 32.36 மில்லியன் ஆன 09 கணனி | 2019 ஆம் ஆண்டின் போது செயற்திட்டத்தை கைவிட்டதன் பின்னர் எஞ்சி காணப்பட்ட உதிரிப்பாகங்கள் காலாவதியாகுவதற்கு முன்னர் ஆகக்கூடிய வகையில் பயன்படுத்தும் நோக்கில் நிறுவனத்தின் பல்வேறு தேவைகளின் பிரகாரம் பயன்படுத்தப்பட்டிருந்தமை, தற்போது பயன்பாட்டில் காணப்படுகின்ற முறைமைகளில் உள்ள பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு காணல் மற்றும் நிறுவனத்தின் செயற்பாடுகளை மிகவும் செயற்திறனாகவும், ஆக்கபூர்வமானதாகவும் பேணிச் செல்லும் நோக்கில் புதிய | புதிய தொழில்முயற்சி வளத் திட்ட முறைமைகளை கட்டியெழுப்புதல் மற்றும் அமுல்படுத்து வதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உபபாகங்களின் விடயங்களில் 497 அலகுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக பயன்படுத்த முடியாத கிரயம் ரூபா 26.11 மில்லியன் ஆன 09 விடயங்களில் 375 அலகுகள் கூட்டுத்தாபனத்தின் ஏனைய பணிகளுக்காக பயன்படுத்துவதற்கு விநியோகிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே இந்த செயற்திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட கிரயம் ரூபா 6.25 மில்லியன் ஆன கணனிகள் மற்றும் 06 துணைப்பாகங்களின் 122 அலகுகள் என்பன கணக்காய்வுத் திகதியான 2022 யூன் 09 ஆந் திகதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் களஞ்சியத்தில் விளைவற்று காணப்பட்டது. தற்போது பயன்படுத்துகின்ற 12 முறைமைகளை பயன்படுத்துகின்ற வாசகர்களின் எண்ணிக்கை 324 ஆக இருந்த போதிலும் புதிய முறைமையை பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட வாசகர்களின் எண்ணிக்கை 1,399 ஆனமையால் இந்த செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தமை கூட்டுத்தாபனத்தின் சகல பிரிவு நடவடிக்கைகளிலும் அதிக தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. | Enterprise Resource Plan (ERP முறைமை) அறிமுகப்படுத்துவதற்கு முயற்சி எடுக்கப்பட்டமை மற்றும் அதன் பெறுகை நடவடிக்கைகளுக்கு தேவையானவைகள் இறுதிக் கட்டத்தில் காணப்பட்ட போதும் நாட்டில் அவசரமாக எழுந்திருந்த பொருளாதார பிரச்சினைகளின் காரணமாக அந்த செயற்பாடுகளை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு முடியாதிருந்தமை, கூடிய விரைவில் மிகவும் ஆக்கபூர்வமான புதிய முறைமையொன்றை அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளோம். | |
| (ஈ) | கூட்டுத்தாபனத்தின் விற்பனைக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதும் தரம் தொடர்பாக காணப்பட்ட குறைபாடுகளின் காரணமாக விற்பனைக்காக விநியோகிக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மொத்தக் கிரயம் ரூபா 4.94 மில்லியன் ஆன 09 மருந்து விடயங்கள் 2022 ஏப்ரல் 22 ஆந் திகதி வரையில் காலாவதியாகியிருந்தது. இந்த இருப்பு தொடர்பாக சரியான நடவடிக்கைகள் உரிய சந்தர்ப்பத்தின் போது எடுக்காமையால் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 4.94 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | - மேற்படி - |
| (உ) | 2005 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையான 17 வருட காலப்பகுதியில் மருத்துவ வழங்கல் பிரிவிற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதும் அந்த பிரிவினால் கையேற்றல் நிராகரித்தமையால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கிரயம் கணிப்பீடு செய்ய முடியாத மருத்துவ வழங்கல் இருப்புக்கள் மற்றும் மொத்தக் கிரயம் ரூபா 345.25 மில்லியன் ஆன மருத்துவ வழங்கல் இருப்புக்கள் தனியார் களஞ்சியங்களில் களஞ்சியப்படுத்த வேண்டி ஏற்பட்டதன் | மருத்துவ வழங்கல் பிரிவின் மூலம் நிராகரிக்கப்பட்ட இருப்புக்களுக்கிடையே ரூபா 79.98 மில்லியன் பெறுமதியான பொருள் இருப்புக்கள் 2022 யூன் 30 ஆந் திகதி வரையிலும் மருத்துவ வழங்கல் பிரிவினால் மீண்டும் கையேற்கப்பட்டமை, அவ்வாறே மருத்துவ வழங்கல் பிரிவின் மூலம் நிராகரிக்கப்பட்ட மேலும் 116 இருப்பு | மருத்துவ வழங்கல் பிரிவில் கையேற்றல் நிராகரித்த இருப்பு விடயங்கள் தொடர்பாக எடுக்க வேண்டிய பின்னர் பகிர்ந்தளிக்கும் செயற்பாட்டு நடவடிக்கைகளை |

| | | | |
|---|---|---|---|
| | காரணமாக அந்தக் காலப்பகுதியின் போது செய்வதற்கு ஏற்பட்ட மேலதிக களஞ்சியக் கிரயம் ரூபா 19.81 மில்லியன் ஆகும். இருப்பினை முறையாக அகற்றுவதற்காக நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக களஞ்சியக் கிரயம் நாளுக்கு நாள் அதிகரித்துச் சென்றமையும் அவானிக்கப்பட்டது. | விடயங்களின் இருப்புக்களை அகற்றுவதற்கு பணிப்பாளர் சபை அங்கீகாரம் கிடைத்திருந்தமை, அந்த இருப்புக்களை அகற்றும் செயற்பாடுகள் தொடர்பாக Insee Ecocycle நிறுவனத்தின் அங்கீகாரம் பெறப்பட்டதன் பின்னர் இந்த இருப்பை அகற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தமை, அவ்வாறே மேலும் சேமிக்கப்பட்டிருந்த இருப்புக்களுக்காக 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்ட இருப்பு மெய்மையாய்வு அறிக்கைகளை பெற்றுக் கொள்வதற்கும் அதன் பின்னர் பணிப்பாளர் சபைக்கு அனுப்பி அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் எதிர்காலத்தில் இருப்புக்களை அகற்றுவதற்கும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | கூடிய விரைவில் பூர்த்தி செய்து அதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கை களுக்காக விரைவாக தொடர்புபடுத்துதல் வேண்டும். |
| (ஊ) | மருத்துவ வழங்கல் பிரிவின் களஞ்சிய தொகுதியில் போதியளவான களஞ்சிய வசதிகள் காணப்படாமையால் கூட்டுத்தாபனத்தால் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் போது இறக்குமதி செய்யப்பட்ட இன்டெண்டு 28 இற்குரிய 28 கொள்கலன்கள் 2021 ஆகஸ்ட் 20 ஆந் திகதி முதல் 2022 பெப்ரவரி 21 வரையான 06 மாத காலம் தனியார் களஞ்சியமொன்றில் வைக்கப்பட்டிருந்ததுடன் அந்த 06 மாதங்களுக்கான களஞ்சியக் கிரயமாக ரூபா 48.28 மில்லியன் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்பட்டிருந்தது. எனினும் கூட்டுத்தாபனத்திற்கு செய்வதற்கு ஏற்பட்டிருந்த இந்த மேலதிக கிரயம் மருத்துவ வழங்கல் பிரிவிலிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | இந்தப் பணத்தை அறவிடுவதற்காக தற்போது வரையில் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வரவுத்தாள் விநியோகிக்கப்பட்டுள்ளது. | மருத்துவ வழங்கல் பிரிவிலிருந்து அறவிட வேண்டிய மேலதிக களஞ்சியக் கிரயத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | மருத்துவ வழங்கல் பிரிவில் தரம் குறைந்த மற்றும் பாதிப்பிற்கு உள்ளான மருந்து வழங்கல் காணப்பட்டமை மற்றும் மருந்து குறைவாக வழங்கப்பட்டமையின் காரணமாக செலவிடப்பட்ட கிரயம், நிர்வாக கட்டணங்கள் மற்றும் அந்த இருப்புக்களை அழிவடையச் செய்யும் செலவினம் என்பவற்றை வழங்குனர்களிடமிருந்து அறவிடுவதற்கு 2021 | 2022 யூன் 30 ஆந் திகதி வரையில் தொடர்ந்தும் அறவிட வேண்டிய பெறுமதியான ரூபா 943.75 மில்லியன் இற்கிடையே ரூபா 693.38 மில்லியன் செலுத்துதலை புறக்கணித்த வழங்குனருக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகளை | தற்போது அறவிடப்படாத பணம் வழங்குனர் களிடமிருந்து அறவிடுவதற்கு செயற்திறனாக நடவடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் விநியோகிக்கப்பட்ட ரூபா 943.75 மில்லியன் வரவுத் தாளிற்காக பணம் அறவிடுவதற்கு 2022 யூன் 30 ஆந் திகதி வரையிலும் தவறியிருந்தது. அதில் ரூபா 71.03 மில்லியன் தொகை கறுப்பு பட்டியலிடப்பட்ட வழங்குனரிடமிருந்து அறவிட வேண்டியிருந்தமையால் அறவிடல் நிச்சயமற்ற நிலையில் காணப்பட்டது. | எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தமை, ரூபா 20.82 மில்லியன் அறவிட முடியாதிருந்ததாக இனங்காணப்பட்டிருந்தமை, ரூபா 9.311 மில்லியன் தேசிய மருந்து ஒழுங்குபடுத்துதல் அதிகார சபையின் பரிந்துரையின் பிரகாரம் திருத்தம் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டமை, ரூபா 71.03 மில்லியன் செலுத்துதல் புறக்கணித்தமையால் உரிய வழங்குனரை கறுப்பு பட்டியலில் இடுவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தமை, ரூபா 398,242 தொகை வழங்குனரினால் செலுத்துவதற்கு இணங்கப்பட்டிருந்தமை, ரூபா 2.24 மில்லியன் இற்காக வழங்குனர்களினால் இலவசமாக மீள் வழங்குவதற்கு இணங்கப்பட்டிருந்தமை மற்றும் மிகுதியாகவுள்ள ரூபா 146.58 மில்லியன் தொகை வழங்குனர்களிடமிருந்து மேலும் அறவிட வேண்டிக் காணப்பட்டது. | வேண்டும். |
| (ஏ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் விற்பனைக்காக கொள்வனவு செய்யப்பட்ட போதும் 2021 சனவரி 01 ஆந் திகதி வரையிலும் தரம் குறைந்த, காலாவதியாகியமை மற்றும் இழப்புக்கு உட்பட்ட மருந்துகளின் மொத்தக் கிரயம் ரூபா 215.48 மில்லியன் ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது தரம் குறைந்த, காலாவதியாகியமை மற்றும் இழப்புக்கு உட்பட்ட மருந்துகளின் மொத்தக் கிரயம் ரூபா 128.93 மில்லியன் ஆகும். கடந்த ஆண்டின் போதும், மீளாய்வாண்டின் போதும் தரம் குறைந்த மருந்துகளின் மொத்தக் கிரயம் ரூபா 40.71 மில்லியனில் ரூபா 25.04 மில்லியன் 2022 யூன் 01 ஆந் திகதி வரையிலும் வழங்குனரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும் கடந்த ஆண்டின் போதும், மீளாய்வாண்டின் போதும் மருந்து காலாவதியாகியமை மற்றும் இழப்பீடுகளினால் கூட்டுத்தாபனத்திற்கு செய்வதற்கு ஏற்பட்ட மொத்த நட்டம் ரூபா 191.86 மில்லியன் ஆகும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | தரத்தில் குறைவடைந்த மருந்துகளின் பெறுமதியை வாடிக்கையாளர் களிடமிருந்து அறவிடுவதற்கும், மருந்து காலாவதியாவதற்கு காரணமாக இருந்த காரணங்களை கண்டறிந்து தீர்வினை வழங்குவதற்கும் மற்றும் அந்த காரணங்களுக்கு பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து நட்டத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | | | எடுத்தல் வேண்டும். |
| (ஐ) | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 50 ஒசுசலைகளில் 26 ஒசுசலைகளும் மீளாய்வாண்டின் போது ரூபா 53.24 மில்லியன் நட்டத்தை பெற்றிருந்தது. அதில் 10 ஒசுசலைகளின் நட்டம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 15 சதவீதம் முதல் 175 சதவீதம் வரையான வீச்சில் உயர்வடைந்திருந்தது. மேலும் கடந்த ஆண்டில் இலாபம் பெற்ற இரத்தினபுரி, ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலை, பண்டாகரம மற்றும் மொனராகலையில் தாபிக்கப்பட்ட 04 ஒசுசலைகள் மீளாய்வாண்டின் போது நட்டத்தை பெற்றிருந்தது. 09 ஒசுசலைகள் கடந்த ஆண்டின் போது பெற்ற இலாபத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் கிடைத்த இலாபம் 5.7 சதவீதம் முதல் 7,411 சதவீதம் வரையிலான வீச்சில் குறைவடைந்திருந்தமையும் அவதானிக்கப்பட்டது. Covid 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக ஏற்பட்டிருந்ததாக தலைவரால் அறிவிக்கப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம். 2022 ஆம் ஆண்டின் போது காணப்பட்ட COVID - 19 தொற்றுநோய் நிலைமை அதற்குக் காரணமாக இருந்தது. | நட்டம் பெறுகின்ற ஒசுசலைகள் தொடர்பாக தொடர்ச்சியாக மேற்பார்வை செய்து நட்டத்தை பெறுவதற்கு தாக்கமளித்த காரணங்களை கண்டறிந்து தீர்வினை வழங்குவதன் மூலம் நட்டத்தை குறைப்பதற்கோ அல்லது இலாபத்தை பெறும் நிலைக்கு உட்படுத்து வதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஒ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒசுசலைகளின் பௌதீக இருப்பு மெய்மையாய்வு அறிக்கைகளின் பிரகாரம் இருப்பு மிகை ரூபா 4.85 மில்லியன் மற்றும் இருப்பு பற்றாக்குறை ரூபா 5.41 மில்லியன் ஆக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டின் போது முறையே ரூபா 5.94 மில்லியன் மற்றும் ரூபா 5.94 மில்லியன் ஆகும். விற்பனை பட்டியல்கள் தயாரிக்கும் போதும், இருப்பு பொதியிடும் போதும் ஏற்படுகின்ற வழுக்கள், கணனி முறைமையில் ஏற்படுகின்ற வழுக்கள், பதவியணியினரால் மேற்கொள்ளப்படுகின்ற குறைபாடுகள், மாத்திரைகள் மற்றும் வில்லை மருந்துகளின் இருப்பாக பொதியிட்டு விற்பனை செய்யும் போது சிறிய அளவாக விநியோகிப்பதன் மூலம் லேபலில் அடங்கியுள்ள அளவுடன் ஏற்படுகின்ற இணங்காமை போன்ற விடயங்கள் இருப்பு பற்றாக்குறை மற்றும் மிகை ஏற்படுவதற்கு காரணமாக இருந்தமை இனங்காணப்பட்டிருந்த போதும் அந்த வழுக்களை குறைப்பதற்காக தேவையான நடவடிக்கைகளை இனங்காண்பதற்கும் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கும் முயற்சி எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | ஒவ்வொரு ஆண்டின் போதும் மேற்கொள்ளப் படுகின்ற இருப்பு பற்றாக்குறை மற்றும் மிகை ஏற்படுவதற்கான காரண வழுக்களை இனங்கண்டு அவற்றை குறைப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டியிருந்த துடன் பற்றாக்குறை மற்றும் மிகை தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஓ) | 2016 ஆம் ஆண்டு முதல் 2022 பெப்ரவரி 11 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் கூட்டுத்தாபனத்தால் இறக்குமதி செய்யப்பட்டு மருத்துவ வழங்கல் பிரிவிற்கு கையளிக்கப்பட்ட 10 இன்டெண்டுக்கான கிரயம் ரூபா 35.76 மில்லியன் ஆன இருப்பு கொள்கலன்கள் பூர்த்தி செய்யப்படாமையால் (Low Consignment Load) மருத்து வழங்கல் பிரிவினால் நிராகரிக்கப்பட்டிருந்தது. இந்த குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக கூட்டுத்தாபனம் துரிதமாக நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக அந்த 10 விடயங்களுக்குரிய இருப்பு கொள்கலன்கள் களஞ்சியப்படுத்தி வைப்பதற்காக ஒரு வருட காலப் பகுதிக்காக மாத்திரம் ரூபா 1.17 மில்லியன் தொகை களஞ்சியக் கிரயமொன்றை செலவிட வேண்டி ஏற்பட்டிருந்தது. | ரூபா 35.76 மில்லியன் கிரயமான இருப்புகளுக்கிடையே கிரயம் ரூபா 4.87 மில்லியனான இருப்புக்கள் மீண்டும் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமை, ரூபா 3.56 மில்லியன் தொகையான இருப்புக்களுக்குரிய கிரயம் வழங்குனர்களிடமிருந்து அறவிடுவதற்கு வரவுத்தாள் விநியோகிக்கப்பட்டமை, அவ்வாறே ரூபா 993,877 தொகையான இருப்புக்களுக்குரிய கிரயம் வழங்குனர்களினால் கூட்டுத்தாபனத்திற்கு தீர்க்க வேண்டியிருந்தமை மற்றும் கிரயம் ரூபா 26.34 மில்லியனான மிகுதி இருப்புக்களுக்குரிய மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | மருத்துவ வழங்கல் பிரிவினால் உரிய இருப்புக்கள் நிராகரிக்கப் படுவதற்கு காரணமான குறைபாடுகளை பூர்த்தி செய்வதற்கும் பின்னர் பகிர்ந்தளிக்கும் செயற்பாடுகள் (Post Delivery Operation) செயற்பாடுகளை விரைவாக மேற்கொள்வதன் மூலம் செலவிடுவதற்கு ஏற்படுகின்ற இந்த மேலதிக களஞ்சியக் கிரயத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்காக கூட்டுத்தாபன விற்பனைகளில் ரூபா 10,673.50 மில்லியன் விற்பனை இலக்கொன்று எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் உள்ளபடியான விற்பனை ரூபா 9,430.95 மில்லியன் மாத்திரம் ஆனமையால் எதிர்பார்த்த இலக்கில் 11 சதவீதமான ரூபா 1,242.55 மில்லியன் விற்பனை இலக்கினை அடைய முடியாதிருந்தது. அவ்வாறே மருத்துவ வழங்கல் பிரிவிற்கு ரூபா 127,913.98 மில்லியன் விற்பனை இலக்கொன்று எதிர்பார்க்கப்பட்ட போதும் உள்ளபடியான விற்பனை ரூபா 70,110.43 மாத்திரமாக இருந்தமையால் எதிர்பார்த்த இலக்கில் | Covid-19 தொற்றுநோய் நிலைமையினால் மருத்துவ வழங்கல் பிரிவினால் சில கட்டளைகள் எதிர்வரும் ஆண்டுகள் வரை நிறுத்தி வைக்கப்பட்டமை மற்றும் சில கட்டளைகள் முழுமையாக இரத்துச் செய்யப்பட்டமை போன்ற விடயங்கள் இந்த நிலைமைக்கு காரணமாக இருந்தது. | சாத்தியமான இலக்குகளுடன் விற்பனை திட்டம் தயாரிக்கப்பட வேண்டியிருந்ததுடன் அந்த திட்டம் காலரீதியான தேவை மற்றும் மாற்றங்களின் பிரகாரம் தேவையான மாற்றங்களை மேற்கொண்டு எதிர்பார்க்கப்பட்ட இலக்கினை அடைந்து |

| | | | |
|---|---|---|---|
| | 45 சதவீதமான ரூபா 57,803.55 விற்பனை இலக்கொன்றை அடைய முடியாதிருந்தது. Covid -19 தொற்று நோய் நிலைமையினால் மருத்துவ வழங்கல் பிரிவினால் சில கட்டளைகள் எதிர்வரும் வருடங்களுக்கு பிற்போட்டமை மற்றும் சில கட்டளைகள் முழுமையாக இரத்துச் செய்யப்பட்டமை போன்ற விடயங்கள் அதற்கு காரணமாக இருந்ததாக தலைவரால் அறிவிக்கப்பட்டிருந்தது. | | கொள்வதற்காக உச்ச அளவில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது மருத்துவ வழங்கல் பிரிவிற்காக கொள்வனவு செய்யப்பட்ட ஒட்சிசன் இருப்பு உரிய வழங்குனரால் நேரடியாக வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டமையால் அவை மருத்துவ வழங்கல் பிரிவிற்கு கிடைத்தமையை உறுதிப்படுத்துகின்ற இலட்சினையுடன் பட்டியல் கூட்டுத்தாபனத்திற்கு பெற்றுக்கொள்ளப்படாமையால் உரிய வரவுக் குறிப்பு (Debit Note) விநியோகிப்பதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்தது. அதன் காரணமாக வழங்குனருக்கு செலுத்தப்பட்ட ரூபா 169.26 மில்லியன் தொகையான முற்பணம் 2022 மே 31 ஆந் திகதி வரையிலும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சரியான சந்தர்ப்பங்களின் போது குறித்துரைத்த விலைப் பட்டியல்கள் பொறுப்பு வாய்ந்த தரப்பினருக்கு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | இரத்மலானை களஞ்சியத்தில் விற்பனை செய்ய முடியுமாக காணப்பட்ட 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எஞ்சிய இருப்பு தொடர்பான காலப்பகுப்பாய்வின் பிரகாரம் மொத்தக் கிரயம் ரூபா 79.23 மில்லியன் ஆன 98 விடயங்கள் மிகவும் குறுகிய ஆயுட்காலத்துடன் (Short Shelf Life) 2022 ஆம் ஆண்டின் போது காலாவதியாகின்ற விடயங்களாக இருந்தது. அதனிடையே ரூபா 43.50 மில்லியன் கிரயமான 74 விடயங்கள் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக விற்பனை செய்யப்படாமல் காணப்படுகின்ற இருப்பாகும். | கருத்து சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | எஞ்சிய இருப்புக்களின் ஆயுட்காலம் தொடர்பாக தொடர்ச்சியான பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு அவற்றின் இருப்பு மட்டம் தொடர்பாக கவனம் செலுத்தி இருப்பினை விற்பனை செய்வதற்கோ அல்லது பகிர்ந்தளிப்பதற்கோ சரியான சந்தர்ப்பங்களில் விற்பனை |

| | | | |
|---|---|---|---|
| | | | அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

3.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுத்தாபனத்தின் விற்பனைக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 12.48 மில்லியன் செலவில் Famotidine Tablets USP (40mg) மருந்தில் (10x10) அளவில் உறை அலகுகள் 90,000 கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. களஞ்சியத்திற்கு கிடைத்த 02 தொகுதிகளில் மருந்துகள் காலாவதியாகும் நாள் பேனாவால் மாற்றப்பட்டிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. 2021 ஒக்தோபர் 27 ஆந் திகதி தரக் குறைபாட்டு குழுவினால் வழங்கப்பட்ட பரிந்துரையின் பிரகாரம் அந்த மருந்தின் சகல தொகுதி இருப்புக்களையும் நிராகரித்தல் மற்றும் இருப்புக்களை மீள அனுப்புவதற்கும் (Withdraw) நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2022 சனவரி 05 ஆந் திகதி வரையில் காலாவதியாகும் திகதி மாற்றப்பட்டிருந்த ரூபா 1.30 மில்லியன் கிரயமான 9,376 உறை அலகுகள் மாத்திரம் எஞ்சியிருந்தமையால் வழங்கல்களை கையேற்ற திகதி வரையிலும் காலாவதியாகியிருந்த மருந்துகள் விற்பனை செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இந்த வழங்கல்களுக்குரிய தினம் 22 நாட்கள் தாமதத்திற்காக மேலும் அறவிட வேண்டிய ரூபா 914,057 ஆன தாமதக் கட்டணம் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | உரிய இருப்புக்களின் பெறுமதியை வழங்குனர்களிடமிருந்து அறவிடுவதற்காக வரவுத்தாள் விநியோகிக்கப்பட்டுள்ளமைதாமதக் கட்டணத்திற்காக விநியோகிக்கப்பட்டுள்ள வரவுத்தாளின் ஒரு பகுதி தற்போது அறவிடப்பட்டுள்ளதுடன் மிகுதியினை அறவிடுவதற்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | முறையான பரிசோதனை யொன்றை மேற்கொண்டு பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்காண்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருந்த துடன் வழங்குனர் களிடமிருந்து அறவிட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | சராசரியான மாதாந்த விற்பனை அளவு உறைகளின் அலகு 1,159 ஆக இருந்தமையால் வருடாந்த விற்பனை தேவை உறை அலகுகள் 13,908 ஆக இருந்த போதும் அதனை கவனத்தில் கொள்ளாமல் மற்றும் முன்னைய | நிறுவனத்தில் மருந்து இருப்புக்கள் பூச்சியம் இன்றி பேணிச்செல்வதற்காக இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | முறையான பரிசோதனை யொன்றை மேற்கொண்டு பொறுப்புவாய்ந்த தரப்பினரை |

| | | |
|---|---|---|
| கட்டளைகளின் உறைகளின் அலகுகள் 40,000 கூட்டுத்தாபனத்திற்கு கிடைப்பதற்கு இருந்த போதும் அது தொடர்பாகவும் கவனத்தில் கொள்ளாமல் கூட்டுத்தாபனத்தின் விற்பனைக்காக 2019 ஆம் ஆண்டின் போது Levofloxacin Tablets (500 mg) மருந்தில் (3x10) அளவில் 72,000 உறை அலகுகள் கட்டளையிடப்பட்டு அதில் 36,000 உறை அலகுகள் ரூபா 5.52 மில்லியன் தொகையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. முன்னைய கட்டளைகளில் வழங்கப்பட்டிருந்த 9,092 உறை அலகுகள் மற்றும் 36,000 உறை அலகுகளில் 22,357 உறை அலகுகள் என்பன 2022 பெப்ரவரி 28 ஆந் திகதி வரையிலும் விற்பனை செய்து கொள்வதற்கு முடியாதிருந்ததுடன் அது வரையில் 45,092 உறை அலகுகள் காலாவதியாகியதன் காரணமாக ரூபா 5.24 மில்லியன் நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. எனினும், அந்த நட்டத்திற்கு பொறுப்பான தரப்பினரை இனங்கண்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | இனங்கண்டு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |

3.4 பெறுகைகள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது ரூபா 373.20 மில்லியன் செலவில் மருந்துகள் கொள்வனவு செய்த 03 சந்தர்ப்பங்களின் போது பொது ஒப்பந்த சட்டத்தின் கீழ் ஒப்பந்தப் பதிவுச் சான்றிதழ் வழங்குனரினால் பெறப்படாதிருந்ததுடன் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமித்தல் தொடர்பாக கூட்டுத்தாபனம் பின்பற்றுகின்ற நடைமுறைகளின் பிரகாரம் ரூபா 50 மில்லியனை விஞ்சுகின்ற பெறுகை மதிப்பீடுகளுக்காக 05 நபர்களை உள்ளடக்கிய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்றுக்கு பதிலாக மூன்று பேர்கள் மாத்திரம் உள்ளடங்கிய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவை மற்றும் அவ்வவ்போது நாளதுவரையாக்க படுகின்ற அதன் திருத்தங்களுக்கு இணங்க பெறுகை முகாமைத்துவம் செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கொவிட் 19 தொற்றுநோயுடன் ஏற்பட்டிருந்த அவசர பெறுகைகளாக இனங்காணப்பட்டு நேரடிக் கொள்வனவு முறைமை பின்பற்றப்பட்டு எந்தவொரு தொழில்நுட்ப மதிப்பீடும் மேற்கொள்ளப்படாமல் ஒரு வழங்குனரினால் சமர்ப்பிக்கப்பட்ட விலையின் அடிப்படையில் பெறுகைகள் மேற்கொண்டு கூட்டுத்தாபனத்தின் விற்பனைக்காக 2020 ஆம் ஆண்டின் போது ரூபா 14.27 மில்லியன் செலவில் ஒன்று ரூபா 1,400 வீதம் 10,000 Safety Goggles மற்றும் ஒன்று ரூபா 1,350 வீதம் 200 Safety Goggles கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.4 வழிகாட்டியின் பிரகாரம் ஒப்பந்தத்தின் மொத்த பெறுமதியில் 20 சதவீத முற்பணமொன்று செலுத்த முடியுமாக இருந்த போதும் அதற்கு முரணாக 50 சதவீத முற்பணமாக ரூபா 07 மில்லியன் வழங்குனருக்கு செலுத்தப்பட்டிருந்தது. வழங்குனரால் சமர்ப்பிக்கப்பட்ட விலையில் கொள்வனவு கட்டளை மற்றும் பொருட்கள் பெறுவனவு பத்திரங்களின் பிரகாரம் Seals Safety Goggles வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்கு பதிலாக 10,200 Swimming Goggles வழங்கப்பட்டிருந்தமை மேற்கொள்ளப்பட்ட பௌதீக கணக்காய்வு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. தேவையினை சரியாக இனங்காணாமல் மற்றும் உரிய விற்பனை எதிர்வுகூறல் இன்றி கொள்வனவுகள் செய்யப்பட்டதன் காரணமாக 10,200 Swimming Goggles இல் 54 மாத்திரம் ஒன்று ரூபா 1,610 வீதம் விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் மொத்தக் கிரயம் ரூபா 13.92 மில்லியன் ஆன 9,945 Swimming Goggles எஞ்சி காணப்பட்டமையும், மொத்தக் கிரயம் ரூபா 281,400 ஆன 201 Goggles பற்றாக்குறையொன்று காணப்பட்டமையும் 2021 நவம்பர் 09 மற்றும் 24 ஆந் திகதிகளில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | இது தொடர்பாக முறையான பரிசோதனையொன்றை மேற்கொண்டு மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | மருத்துவ வழங்கல் பிரிவின் தேவைக்காக 2020 ஆம் ஆண்டின் போது ரூபா 21.49 மில்லியன் கிரயமான நபர்களின் பாதுகாப்பு | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | - மேற்படி - |

உபகரணங்கள் (Personal protective equipment-(PPE)) 5,000 தொகுதிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. மருத்துவ வழங்கல் பிரிவினால் அல்லது கூட்டுத்தாபனத்தால் PPE தொகுதிகளுக்காக தேவையான மாதிரிகள் தயாரிக்கப்படாதிருந்ததுடன் எந்தவொரு முறையில்லாவது கூறுவிலை மற்றும் தொழில்நுட்ப மதிப்பீடுகள் மேற்கொள்ளாமல் ஒரு வழங்குனரால் சமர்ப்பிக்கப்பட்ட Profoma Invoice அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. கட்டளையிடப்பட்ட PPE 5,000 தொகுதிகளில் 2,000 தொகுதிகளின் இருப்பு கூட்டுத்தாபனத்திற்கு கிடைத்து மருத்துவ வழங்கல் பிரிவிற்கு அனுப்பப்பட்ட போதும் "Isolation Gown" மாத்திரம் வழங்கப்பட்டிருந்தமை மருத்துவ வழங்கல் பிரிவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட கட்டளைகளில் குறிப்பிடப்பட்ட "PPE Set" ஆக இருந்தமை குறிப்பிட்டு உரிய இருப்பை கையேற்றல் நிராகரிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு இருக்கும் போது PPE 3,000 தொகுதிகளை உள்ளடக்கிய இரண்டாவது இருப்பும் வழங்குனரிடம் இருந்து கையேற்று மருத்துவ வழங்கல் பிரிவிற்கு அனுப்பப்பட்ட போதும் முன்னர் காண்பித்த காரணங்களை காண்பித்து அந்த இருப்பும் நிராகரிக்கப்பட்டிருந்தது. வழங்குனருக்கு செலுத்தப்பட்ட ரூபா 21.49 மில்லியன் தொகை மற்றும் சேவைக் கட்டணம் ரூபா 8.13 மில்லியன் மருத்துவ வழங்கல் பிரிவிலிருந்து மீளளிப்புச் செய்து கொள்வதற்கு முடியாமையால் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 29.62 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது PPE தொகுதிகள் 4,997 களஞ்சியத்தில் காணப்பட்டமையும் 03 தொகுதிகளின் பற்றாக்குறை காணப்பட்டமையும் அவதானிக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மருத்துவ வழங்கல் பிரிவினால் 2021 ஆம் ஆண்டின் தேவையாக இனங்காணப்பட்டிருந்த Papaverine HCL injection 60mg/2ml தடுப்பூசிகளின் 1,560 அலகுகள் ரூபா 68.59 மில்லியன் செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இந்த | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | - மேற்படி - |

பெறுகைகளுக்காக கூட்டுத்தாபனத்தால் மேற்கொள்ளப்பட்ட உள்நாட்டு தேசிய திறந்த போட்டிக் கேள்வி கோரலின் பிரகாரம் ஒரு கேள்விதாரர் மாத்திரம் கேள்வி சமர்ப்பித்திருந்தமையும், ஒரு தடுப்பூசி அலகின் மதிப்பீடு செய்யப்பட்ட விலை ரூபா 255.07 ஆக இருந்த போதிலும் ஒரு அலகிற்கான கேள்வி ரூபா 40,868.98 ஆக இருந்தமையாலும் மீண்டும் கூறுவிலை கோரப்பட வேண்டியிருந்த போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் திணைக்கள பெறுகைக் குழுவினால் இந்த தடுப்பூசி அலகு ஒன்று ரூபா 40,868.98 வீதம் 3,125 தடுப்பூசி அலகுகள் ரூபா 127.72 மில்லியன் தொகையில் கொள்வனவு செய்வதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமனம் தொடர்பாக கூட்டுத்தாபனம் பின்பற்றுகின்ற நடைமுறைகளின் பிரகாரம் ரூபா 50 மில்லியனை விஞ்சுகின்ற பெறுகைகளின் மதிப்பீட்டிற்காக 05 நபர்களை உள்ளடக்கிய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்று சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 03 நபர்களை மாத்திரம் உள்ளடக்கிய கூட்டுத்தாபனத்தால் நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் கேள்வி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. நாணயக் கடிதம் திறப்பதற்கு முன்னர் காணப்படுகின்ற இருப்பு மட்டத்தை கவனத்தில் கொண்டதன் பின்னர் அல்லது அது தொடர்பாக மருத்துவ வழங்கல் பிரிவின் அங்கீகாரத்தை பெற்றுக் கொண்டதன் பின்னர் அல்லது கட்டளையிட வேண்டியமை மருத்துவ வழங்கல் பிரிவினால் அறிவிக்கப்பட்டிருந்த போதும் கூட்டுத்தாபனம் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அவ்வாறே திணைக்கள பெறுகை குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் வருடாந்த பாவனை தடுப்பூசி அலகுகள் 650 வீதம் மொத்த தடுப்பூசி அலகுகளின் அளவில் 40 சதவீதம் அதாவது 1,250 அலகுகளிற்காக மாத்திரம் நாணயக் கடிதம் திறக்கப்பட வேண்டியிருந்த போதிலும் திணைக்கள பெறுகைகள் குழு அங்கீகாரத்தை மீறி 1,563 தடுப்பூசி அலகுகளுக்காக ரூபா 68.73 மில்லியன் தொகையான நாணயக் கடிதம் திறக்கப்பட்டிருந்தது, 2021 யூலை

18 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்ட 1,560 தடுப்பூசி அலகுகளில் 1,421 தடுப்பூசி அலகுகள் 2022 ஆகஸ்ட் 20 ஆந் திகதி வரையிலும் எஞ்சியிருந்ததுடன் அவை 2023 பெப்ரவரி மாதத்தின் போது காலாவதியாகின்றமை அவதானிக்கப்பட்டது. ஒப்பந்த உடன்படிக்கை 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த உடன்படிக்கை சட்டத்தின் கீழ் பதிவு செய்து பதிவினை உறுதிப்படுத்தும் பதிவுச் சான்றிதழ் கூட்டுத்தாபனத்திற்கு பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.5 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கொழும்பு 07 இன் ஒசுசலைக்காக மின் பாரந்தூக்கியொன்றை பொருத்துவதற்காக 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 724,936 செலுத்தப்பட்டிருந்ததுடன் அது 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்படாத வேலையின் கீழ் காண்பிக்கப்படுகின்ற போதும் 07 வருட காலம் கடந்திருந்த போதும் மின் பாரந்தூக்கியை பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மின்பாரந்தூக்கிக்காக வழங்குனர் நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட பரிசோதனை அறிக்கைகளின் பிரகாரம் அந்த மின் பாரந்தூக்கி மாதிரிகளுக்கு இணங்காதிருந்தமையால் அதனை கையேற்க முடியாதிருந்தமை, பாரந்தூக்கிக்காக "Whole Test Certificate" சமர்ப்பிப்பதற்கும் தவறியிருந்தமை, மாதிரிகளுக்கிணங்க பாரந்தூக்கியை பொருத்துவதற்கு வழங்குனர் கம்பனிக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தமை மற்றும் அதற்காக விருப்பம் தெரிவிக்கப்பட்ட போதும் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கு வழங்குனர் கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | முற்பண பிணைமுறியை பணமாக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |